**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, தேனி மாவட்டம் – ‘‘கிராமப்புற குறைபாடுடையோர் நலச் சங்கம்’’ (ARVI Trust) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் 2017–2018ஆம் நிதியாண்டில் செயல்படுத்தியது – திட்டத் தொடராணை மற்றும் செலவினத் தொகை ரூ.7,20,480/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 64**

**நாள்: 27.09.2018**
**விளம்பி – புரட்டாசி, 11**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (1டி) எண் 81, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 24.11.2016ல்
2. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க. எண் 1865/சிப/2017, நாள் 27.03.2018.

----------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தேனி மாவட்டத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளியை “ARVI Trust” என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் 2016–2017ஆம் ஆண்டில் செயல்படுத்திட திட்டத் தொடராணையும், செலவினத்திற்கென ரூ.2,90,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் தேனி மாவட்டத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளியினை கிராமப்புற குறைபாடுடையோர் நலச் சங்கம் (ARVI Trust) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு தசைப் பயிற்சியாளர் மற்றும் ஆயா பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டு உள்ளதாகவும், நிறுவனத்திற்கு புதியதாக வாடகை மானியமும் தேவைப்படுவதாகவும் இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மானியம் 10 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது எனவும். மேற்காணும் சிறப்புப் பள்ளியை 2017–2018ஆம் நிதியாண்டிலும் செயல்படுத்தியமைக்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.7,20,480/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு தெரிவித்து பின்வரும் விவரங்களை அளித்துள்ளார்:-

| வ. எண் | செலவின விவரம் | ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை | தற்போது கூடுதலாக வழங்கக் கோரும் தொகை |
|---|---|---|---|
| 1. | உணவூட்டுச் செலவினம் | ரூ.12 x 24 பேர் 26 நாட்கள் 12 மாதம் = ரூ.89,856/– | ரூ.18 x 30 பேர் 26 நாட்கள் 12 மாதம் = ரூ.1,68,480/– |
| 2. | மருத்துவ செலவினம் | ரூ.5,000/– (ஆண்டுக்கு) | ரூ.5,000/– |
| 3. | சிறப்பாசிரியர் (கௌரவ ஊதியம்) | 2 பேர் x ரூ.10,000/– x 10 மாதம் = ரூ,2,00,000 | 2 பேர் x ரூ.10,000 x 12 மாதம் = ரூ.2,40,000/– |
| 4. | சில்லரை செலவினம் | ரூ.10,000/– | ரூ.10,000/– |
| 5. | ஆலோசனை வழங்கும் செலவினம் | ரூ.4,000/– | ரூ.4,000/– |
| 6. | நிர்வாக செலவினம் | ரூ.5,000/– | ரூ.5,000/– |

(த.பி.பா.)

| | | | |
|---|---|---|---|
| **7.** | தசைப் பயிற்சியாளர் மதிப்பூதியம் | வழங்கப்படவில்லை | **1** நபர் x ரூ.**10,000/–** x **12** மாதம் = ரூ.**1,20,000/–** |
| **8.** | ஆயா – மதிப்பூதியம் | வழங்கப்படவில்லை | **2** நபர் x ரூ.**2,000/–** x **12** மாதம் = ரூ.**48,000/–** |
| **9.** | வாடகை | வழங்கப்படவில்லை | மாதம் ரூ.10,000/– x 12 மாதம் = ரூ.1,20,000/– |
| **மொத்தம்** | | **ரூ.3,13,856/–** | **ரூ.7,20,480/–** |

**3.** மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று தேனி மாவட்டத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளியினை "கிராமப்புற குறைபாடுடையோர் நலச் சங்கம்" (ARVI Trust) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் **2017–2018**ஆம் நிதியாண்டில் செயல்படுத்தியமைக்கு திட்டத் தொடராணை மற்றும் செலவினத் தொகை ரூ.7,20,480/–க்கு (ரூபாய் ஏழு இலட்சத்து இருபதாயிரத்து நானூற்று எண்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

**4.** மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**"2235** – சமூகப் பாதுகாப்பும் நலனும் **– 02 –** சமூகநலன் **– 101** – மாற்றுத் திறனாளிகள் நலன்– மாநிலச் செலவினங்கள் – CF – மனவளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கான பள்ளிகளை நடத்தும் அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி – **09** – உதவித் தொகை**–03** – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை."
**(**து.தொ.கு **2235–02–101–CF–0934)**

**5.** மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் செலவினம் ரூ.7,20,480/– **2018–2019**ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி மேலே பத்தி–**3**ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இச்செலவினத்தை **2018–2019**ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாமல் நிதித் (ச.ந.) துறைக்கு, உரிய நேரத்தில், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா எண் **48074**/நிதி (ச.ந.)/**2018**, நாள் **25.09.2018–**ல் பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல நிதியொதுக்கப் பேரேட்டு எண்ணுடன் **1393** (ஆயிரத்து முன்னூற்று தொண்ணூற்று மூன்று) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–**5.**
மாவட்ட ஆட்சியர், தேனி மாவட்டம். (மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், தேனி மாவட்டம்.
(மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)

[த.பி.பா.]

மாநிலக் கணக்காயர், சென்னை–18. (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொது–II)த் துறை, சென்னை–9.
அரசு செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.